...வன் செந்தமிழ் வாசகம்

1



ஜெ...லவன் கம்பெனி

செல்வன்
செந்தமிழ் வாசகம்

முதற்புத்தகம்

ஆசிரியர் :
வித்துவான் G. மைக்கேல் பிள்ளை, M.A.

பதிப்பாசிரியர் :
மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

[Paper used : 24 lbs. White Printing.]

ஜெகசெல்வன் கம்பெனி

ராமவர்மபுரம் நாகர்கோவில் | தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி

 1958 [விலை ந.பை. 40

முதற்பதிப்பு—பிப்பிரவரி, 1958
இரண்டாம் பதிப்பு—ஜூன், 1958

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 28-5-1958, Page 3]

Kabeer Printing Works, Madras (3803) *

முன்னுரை

இவ்வாசக வரிசை, சென்னைக் கல்வியிலாக்கா அதிகாரிகள் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தை முற்றுந் தழுவி இயற்றப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலையில் பயிலும் மாணவ மாணவிகள், ஐந்தாம் வகுப்பை முடிப்பதற்குள் தங்கள் தாய் மொழியிற் பிழையறப் பேசவும் எழுதவும், எடுத்த நூலைப் படித்துப் பொருள் உணரவும் வல்ல மொழிப்பயிற்சியைப் பெறுவதுடன், கல்வி கற்பதில் ஆர்வம் கொண்டு மேன்மேலும் கற்கவும் வழி வகுப்பது இப்பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

இக்கருத்தை உட்கொண்டே இவ்வாசக வரிசை இயற்றப்பட்டுள்ளது என்பது, ஆரம்பப் பாடசாலையிற் கல்வி கற்பிக்கும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இவ்வரிசையைக் கவனிப்பின் எளிதிற் புலனாகும். சிறுவர் சிறுமியர்க்கு மொழிப்பயிற்சியில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுதற்கான வகையில் இனியதும் எளியதும் விரும்பிக் கற்கத் தக்கதுமான முறையில் மொழியமைப்பும் பொருளமைப்பும் அமைந்துள்ளன.

தமிழ் மொழி பயில்வோர் அம்மொழித் திறம் அறிந்து பயில்வதற்கு ஓரளவு இலக்கணப் பயிற்சி இன்றியமையாதது. ஆதலின், இவ்வாசக வரிசையில் வகுப்புக்கேற்ற வகையில் எளிய முறையில் இலக்கணப் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் அப்பாடத்திற் பயின்று வந்துள்ள அருஞ்சொற்களும், அப்பாடத்தை மாணவர் நன்கு நினைவு கூர்தற்குரிய வகையிற் கேள்விகளும், சொல்லாட்சி, வாக்கிய அமைப்பு, சொற்பொருள் உணர்வு முதலியவற்றுக்கான பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், இவ்வாசக வரிசையைப் பயன் படுத்துவதால், கல்வியிலாக்கா அதிகாரிகள் கருத்தூன்றி வகுத்துள்ள பாடத்திட்டம் ஆரம்பப்பள்ளியிற் பயிலும் மாணவ மாணவிகளுக்கு மிகுந்த நலம் பயக்குமெனக் கூறலாம். ஆதலின், ஆரம்பக் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள அறிஞர் பெருமக்கள் இவ்வாசக வரிசையை ஆதரித்து என்னை ஊக்கியருள்வார்கள் எனும் நம்பிக்கை எனக்குண்டு.


ஆசிரியன்

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்;
நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.









பிள்ளைகள் படங்களின் பெயரைக் கூறும்படி செய்து, பெயர்களின் முதல் எழுத்தைக் கற்பித்தல் :



அணில்



ஆடு




இலை




ஈக்கள்




உரல்



ஊதல்



எருமை



ஏர்



ஐவர்



ஒட்டகம்




ஓடம்



ஔவை

படங்களை ஏற்ற உச்சரிப்புடன் வாசித்து, எழுத்துக்-
களின் ஒலியைப் பயிற்றல்.




கட்டில்




குரங்கு



சங்கு




மஞ்சள்



வட்டம்




கண்



தட்டு



நகம்




பட்-டம்




மரம்



யா-னை



அரம்




பல்



வண்-டி




பழம்



சோ-ளம்



பற்-கள்



மீன்

உயிரெழுத்துக்களை உச்சரிக்கக் கற்பித்தல் :

அ, ஆ, இ, ஈ, உ, ஊ,
எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

மெய்யெழுத்துக்களை அகர உயிரெழுத்துடன் சேர்த்து உச்சரிக்கக் கற்பித்தல் :

க், ங், ச், ஞ், ட், ண்,
த், ந், ப், ம், ய், ர்,
ல், வ், ழ், ள், ற், ன்

க் + அ = க   கா் + ஆ = கா

பாடம் 1

க	கா
ங	ஙா
ச	சா
ஞ	ஞா
ட	டா
ண	ணா
த	தா
ந	நா
ப	பா
ம	மா
ய	யா
ர	ரா
ல	லா
வ	வா
ழ	ழா
ள	ளா
ற	றா
ன	னா





அரம்   ஆ-ல-மரம்

கல்	கால்
பலம்	பா-லம்
மனம்	மா-னம்
வனம்	வா-னம்


அம்-மா ஆப்-பம் தா.

அவன் கனாக் கண்-டான்.

ு, அ, ஆ, ஆ, ா, ‿

பாடம் 2

படங்களின் பெயரை எழுது :—



க் + இ = கி

கி
ஙி
சி
ஞி
டி
ணி
தி
நி
பி
மி
யி
ரி
லி
வி
ழி
ளி
றி
னி

பாடம் 3



இலை

இடம்	இடி
அணில்	மிதி
மயில்	விசி-றி
கிளி	கிண் - ணம்

இவன் பழம் தின்-ருன்.


அணில் வால் பார்.

அ, இ, ◌ி, ◌ி, ◌ி, கி, ரி, டி

க் + ஈ = கீ

கீ
ஙீ
சீ
ஞீ
டீ
ணீ
தீ
நீ
பீ
மீ
யீ
ரீ
லீ
வீ
ழீ
ளீ
றீ
னீ

பாடம் 4



ஈக்-கள்

ஈ	ஈ-ரம்
நீ	நீர்
தீ	வீ-தி
மீன்	நீ-லம்

அழ-கிய ஈட்-டி
வா-னம் நீ-ல நிறம்

ா . ., ஈ, ி, ீ, ீ, கீ, ரீ, டீ

க் + உ = கு

கு
ஙு
சு
ஞு
டு
ணு
து
நு
பு
மு
யு
ரு
லு
வு
ழு
ளு
று
னு

பாடம் 5



உரல்

உளி	உப்-பு
பசு	குரங்-கு
குரு-வி	குரு-டன்
சுடு	துட்-டு

இரக்கம் உள்ளவன் ஈசன்.
சுத்தம் சுகம் தரும்.

உ, உ, ு, ு, கு, டு,
ு, ூ, சு, லு

க் + ஊ = கூ

கூ
ஙூ
சூ
ஞூ
டூ
ணூ
தூ
நூ
பூ
மூ
யூ
ரூ
லூ
வூ
ழூ
ளூ
றூ
னூ

பாடம் 6



ஊஞ்சல்

ஊ-சி	தூ-சி
கூ-டு	சூ-டு
பூட்-டு	மூட்-டு
ஊக்-கம்	தூக்-கம்

ஊ-மத்-தம்-பூ தா.

ஊஞ்-சல் ஆ-ட வா.

உ ள, ஊ, ு, ூ, கூ, டூ

ு, ூ, வூ, லூ

க் + எ = கெ

கெ
ஙெ
செ
ஞெ
டெ
ணெ
தெ
நெ
பெ
மெ
யெ
ரெ
லெ
வெ
ழெ
ளெ
றெ
னெ

பாடம் 7



எலி

எட்-டு	வெட்-டு
நெய்	நெல்
செம்-பு	வெண்-ணெய்
தெரு	எண்-ணெய்

எள்-ளில் எண்-ணெய் எடுக்-கலாம்.
வண்-ணான் துணி வெளுக்-கிறான்.
எரு-து வண்-டி இழுக்-கும்.

எ, எ ெ, கெ

க் + ஏ = கே

கே
ஙே
சே
ஞே
டே
ணே
தே
நே
பே
மே
யே
ரே
லே
வே
ழே
ளே
றே
னே

பாடம் 8



ஏர்

ஏ-டு	வேர்
மே-டு	தேள்
சே-வல்	பேன்
தேங்-காய்	தேன்

ஏர் உழ உத-வும்.
பசு புல் மே-யும்.
சே-வல் அழ-காய் இருக்-கும்.

எ ,, ஏ. ே, கே

க் + ஐ = கை

கை
ஙை
சை
ஞை
டை
ணை
தை
நை
பை
மை
யை
ரை
லை
வை
ழை
ளை
றை
னை

பாடம் 9



ஐந்-து

ஐ-யர்	பூ-னை
ஆ-மை	பை-யன்
தவ-ளை	தா-மரை
மலை	மா-லை

ஐ-யர் நேற்று வந்தனர்.
பூ-னை எலி-யைப் பிடிக்-கும்.
பூ-னையின் பற்-கள் கூர்-மை யா-னவை.

ஐ, ஐ. ை, ை. கை, னை

க் + ஒ = கொ

கொ
ஙொ
சொ
ஞொ
டொ
ணொ
தொ
நொ
பொ
மொ
யொ
ரொ
லொ
வொ
ழொ
ளொ
றொ
னொ

பாடம் 10



ஒட்-டகம்

ஒட்-டு	பொட்-டு
கொடு	தொடு
தொட்-டி	நொண்-டி
பொ-ங்கல்	தொங்-கல்

ஒட்-டகம் உய-ரமா-ன விலங்-கு.
அதன் முது-கில் திமில் உண்-டு.

ொ,	ஒ	ெ-ா,	கொ
ெ◌,	ணொ		

க் + ஒ = கோ

கோ
ஙோ
சோ
ஞோ
டோ
ணோ
தோ
நோ
போ
மோ
யோ
ரோ
லோ
வோ
ழோ
ளோ
றோ
னோ

பாடம் 11



ஓ-ணன்

ஓ-டு	ஓட்-டு
தோ-டு	போ-டு
தோட்-டி	போட்-டி
ஓட்-டம்	தோட்-டம்

ஓ-ணன் செடி-யில் வா-ழும்.
ஓ-டம் நீ-ரில் செல்-லும்.
ஓ-டத்-தால் ஆற்-றைக் கடக்-கலாம்.

ஒ ᓂ, ஓ. ே-ா, கோ
ே , ணோ

க் + ஔ = கௌ

கௌ
ஙௌ
சௌ
ஞௌ
டௌ
ணௌ
தௌ
நௌ
பௌ
மௌ
யௌ
ரௌ
லௌ
வௌ
ழௌ
ளௌ
றௌ
னௌ

பாடம் 12



ஔ-வையார்

ஔ-வியம்	வௌ-வால்

ஔ-வையார் படித்-தவர்.
அவர் பாட்-டுக்-கள்
பாடினார்.
அவர் நெல்-லிக்-கனி
தின்-றார்.
அத-னால் நெடு-நாள்
வாழ்ந்-தார்.

ஔ, ெ-ள, கௌ

பாடம் 13

மாணவன் என்ன செய்கிறுன் ?



குறிப்பு :—படங்களின் உதவிகொண்டு, எழுவாய் பயனிலைகளை அமைத்துச் சொற்றெடர் ஆக்கப் பயிற்றுக.

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ
க	கா	கி	கீ	கு	கூ	கெ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ
ச	சா	சி	சீ	சு	சூ	செ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ
த	தா	தி	தீ	து	தூ	தெ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ
ற	றா	றி	றீ	று	றூ	றெ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ

ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
கே	கை	கொ	கோ	கௌ	க்
ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
டே	டை	டொ	டோ	டௌ	ட்
ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
தே	தை	தொ	தோ	தௌ	த்
நே	நை	நொ	நோ	நௌ	ந்
பே	பை	பொ	போ	பௌ	ப்
மே	மை	மொ	மோ	மௌ	ம்
யே	யை	யொ	யோ	யௌ	ய்
ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
லே	லை	லொ	லோ	லௌ	ல்
வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
றே	றை	றொ	றோ	றௌ	ற்
னே	னை	னொ	னோ	னௌ	ன்

பாடம் 14

பின் வரும் சொற்களைப் பொருள் விளங்க நிறுத்திப் படி :—

கல்	கஞ்-சன்	கலைக்-கர்
மண்	கண்-ணன்	கண்-டவன்
கடல்	கள்-ளர்	கற்-றவர்
கடன்	கட்-டம்	கட்-டடம்
தவம்	தமை-யன்	தந்-தையார்
தளம்	தஞ்-சம்	தஞ்-சா-வூர்
நலம்	நட-னம்	பதற்-றம்
நகர்	பஞ்-சம்	பட்-டணம்
பணம்	பந்-தல்	மங்-கலம்
பயம்	பக்-கம்	வணக்-கம்
மணம்	பண்-டம்	வல்-லவன்
மலர்	மன்-னர்	தங்-கப்-பல்
வடம்	வண்-டல்	வட்-டக்-கல்

பாடம் 15




என் தாய்

என்னைப் பெற்ற என் தாயே!
இனிய பண்டம் தருவாயே.
சொன்ன தெல்லாம் கேட்பேனே;
சோம்பல் இன்றிக் கற்பேனே.
கற்ற தெல்லாம் சொல்வேனே;
கடவுள் பாதம் பணிவேனே;
குற்றம் ஒன்றும் செய்யேனே;
கொஞ்சி முத்தம் தருவாயே.

பாடம் 16

படங்களின் பெயரை எழுது ; பயனிலே சேர்த்துச் சொற்றொடர் ஆக்கு.



பாடம் 17



வாக்கிய அமைப்பு-I

நான் எழுதுகிறேன்.

நாங்கள் எழுதுகிறோம்.

நீ வண்டி ஓட்டுகிறாய்.

நீங்கள் பந்து ஆடுகிறீர்கள்.

அவன் துணி தைக்கிறான்.

அவள் ஊஞ்சல் ஆடுகிறாள்.

அவர் மரம் வெட்டுகிறார்.

அவர்கள் கடைக்குப் போகிறார்கள்.

அது புல் மேயும்.

அவை வண்டி இழுக்கும்.

சொற்கள் :


நான்	நீங்கள்	ஆடுகிறீர்கள்
அவன்	அவர்	தைக்கிறான்
அவள்	அவர்கள்	ஆடுகிறாள்
அது	அவை	வெட்டுகிறார்
நாங்கள்	ஓட்டுகிறாய்	போகிறார்கள்

பயிற்சி :

1. விடை சொல்லு :—
   1. நான் என்ன செய்கிறேன் ?
   2. நீ என்ன செய்கிறாய் ?
   3. அவன் என்ன செய்கிறான் ?

2. கோடு இட்ட இடங்களைத் தகுந்த சொல்லால் நிரப்பு :—
   1. அவள் ஊஞ்சல் ——— .
   2. அவர் மரம் ——— .
   3. அவர்கள் ——— ——— .
   4. அது ——— ——— .
   5. அவை ——— ——— .

பாடம் 18



வாக்கிய அமைப்பு—II

நான் சாப்பிட்டேன்.
நீ சாப்பிட்டாய்.
அவன் சாப்பிட்டான்.
நானும் நீயும் சாப்பிட்டோம்.
நானும் நீயும் அவனும் சாப்பிட்டோம்.
நாம் சாப்பிட்டோம்.

நீ பாடம் படிக்கிருய்.
அவன் பாடம் படிக்கிருன்.
நீயும் அவனும் பாடம் படிக்கிறீர்கள்.
நீங்கள் பாடம் படிக்கிறீர்கள்.
அவன் புத்தகம் வைத்திருக்கிருன்.
அவள் புத்தகம் வைத்திருக்கிருள்.
அவனும் அவளும் புத்தகம் வைத்திருக்கிருர்கள்.

சொற்கள் :


நாம்	பாடம்
புத்தகங்கள்	படிக்கிறீர்கள்
வைத்திருக்கிருர்கள்	சாப்பிட்டோம்

பயிற்சி :


1. விடை சொல்லு :—
   1. நாம் என்ன செய்தோம் ?
   2. நீங்கள் என்ன செய்கிறீர்கள் ?
   3. அவர்கள் என்ன செய்கிருர்கள் ?
2. கோடு இட்ட இடங்களைத் தகுந்த சொல்லால் நிரப்பு :—
   1. நானும் நீயும் ——.
   2. அவனும் அவளும் ——.
   3. அவர்கள் ——.

பாடம் 19


படம் சேர்த்துப் படித்தல்



குரைக்கும்.



கனைக்கும்.




ஊளை இடும்.




முழங்கும்.



கத்தும்.



பிளிறும்.



உறுமும்.


பயிற்சி:

கோடு இட்ட இடங்களைத் தகுந்த சொல்லால் நிரப்பு:


1. நாய் —— .
2. குதிரை —— .
3. சிங்கம் —— .
4. —— உறுமும்.
5. யானை —— .
6. —— ஊளையிடும்.

பாடம் 20

இவற்றின் பன்மைப் பெயரை எழுது ; பயனிலை சேர்த்துச் சொற்றொடர் ஆக்கு.



பாடம் 21



(பாட்டு)

அப்பா! அப்பா! வாவா.

ஆசைக் கிளியே! வாவா.

இன்பத் தேனே! வாவா.

ஈடில் அழகே! வாவா.

உண்ணத் தருவேன் வாவா.

ஊஞ்சல் ஆட வாவா.

எங்கள் அரசே! வாவா.

ஏரார் மகனே! வாவா.

ஐயா! அருகில் வாவா.

ஒளியார் விழியே! வாவா.

ஓசை மணியே! வாவா.

ஔவை தமிழே! வாவா.

பாடம் 22

எதிர் எதிராக வாசி :—

அவல்	ஆவல்	இனம்	ஈனம்
ஒட்டு	ஓட்டு	எடு	ஏடு
கண்	காண்	வளை	வாளை
மிதி	மீதி	நிலம்	நீலம்
சுடு	சூடு	குடம்	கூடம்
செம்பு	சேம்பு	குடை	கூடை
பனை	பானை	வெல்	வேல்
மடு	மாடு	பட்டி	பாட்டி
அணை	ஆணை	மலை	மாலை
கொடு	கோடு	பட்டு	பாட்டு
பல்	பால்	தடி	தாடி
குனி	கூனி	அடி	ஆடி

இவை போன்ற சில சொற்களைச் சேர்த்து எழுது.

பாடம் 23

கோடு இட்ட இடத்தில் ஏற்ற சொல்லை அமைத்து எழுது :—

வண்ணார், வணிகர், ஆசிரியர், கடவுள், தையற்காரர், குயவர், மாணவர், தாயார்

என்னைப் பெற்றவர் ———

உலகத்தைப் படைத்தவர் ———

பாடம் கற்பிப்பவர் ———

பாடம் படிப்பவர் ———

பொருள்களை விற்பவர் ———

துணி வெளுப்பவர் ———

துணி தைப்பவர் ———

பானை செய்பவர் ———

பாடம் 24

பொருத்தமான சொற்களைச் சேர்த்து எழுது :—


பசு	கூவும்
சேவல்	பால் தரும்
பொங்கல்	இனிக்கும்
மிட்டாய்	பண்டிகை
வேம்பு	புளிக்கும்
மாங்காய்	கசக்கும்
மிளகாய்	கரிக்கும்
உப்பு	சுடும்
பாக்கு	காரும்
தீ	துவர்க்கும்
வாழைக்	கேட்கும்
காது	குலை

பாடம் 25


கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

1. வேலன் எழுதுகோலால் ——.
2. —— ஏரால் உழுகிருன்.
3. நான் —— படிக்கிறேன்.
4. நாம் கண்களால் ——.
5. நீ தண்ணீர் ——.
6. அவன் துணியைத் ——.
7. பசு —— மேய்கிறது.
8. கன்றுக்குட்டி பால் ——.
9. சேவல் ——.
10. பெண்கள் —— படிக்கிருர்கள்.

பாடம் 26



இது கரும்பலகை.
இது வகுப்பறையில்
இருக்கின்றது.
இதில் சீமைச் சுண்-
ணும்பினுல் எழுத-
லாம்.



இது கட்டில்.
இதில் நான் உறங்கு-
கிறேன்.
கட்டிலில் மெத்தை
விரிப்பார்கள்.



இது பம்பரம்.
இது விளையாட உதவும்.
பம்பர விளையாட்டு
மகிழ்ச்சி தரும்.

பாடம் 27



இந்த வீடு எங்கள் வீடு.


இந்த வீட்டில் நானும் என் பெற்ருே-
ரும் வசிக்கின்ருேம்.

இதில் பல அறைகள் உண்டு.

இங்கு நன்ருகக் காற்று வீசும்.

அதனுல், நாங்கள் இன்பமாய் வாழ்-
கிருேம்.

பாடம் 28



இவர் காந்தி தாத்தா. இவர் நமது நாட்டின் தந்தையார். இவர் நாட்டிற்கு உழைத்த நல்லவர். இவ-ரைப் பெரியார் என மக்கள் வழங்கு-வார்கள். இவரால் நாட்டிற்கு உரிமை கிடைத்தது. இவருக்கு நாம் வணக்-கம் செய்வோம்.

பாடம் 29



பூச்செடி

பூச்செடி அழகாய் இருக்கும்.
இதை வீட்டில் வளர்க்கலாம்.
இதற்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும்.
சில செடிகளின் இலை பச்சையாய் இருக்கும்.
சில செடிகளில் மஞ்சள் நிறமான இலை உண்டு.
சில சிவப்பு இலைச் செடிகளும் இருக்கின்றன.

பாடம் 30

கோடு இட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுது :—

பச்சை, கறுப்பு, மஞ்சள், நீலம், சிவப்பு, வெள்ளை.

மிளகாய் என்ன நிறம் ?
மிளகாய் ——— நிறம்.

காகம் என்ன நிறம் ?
காகம் ——— நிறம்.


வாழைப்பழம் என்ன நிறம் ?
வாழைப்பழம் ——— நிறம்.

வானம் என்ன நிறம் ?
வானம் ——— நிறம்.

இரத்தம் என்ன நிறம் ?
இரத்தம் ——— நிறம்.

பஞ்சு என்ன நிறம் ?
பஞ்சு ——— நிறம்.

பாடம் 31



மீன் தண்ணீரில் வசிக்கும்.


இது தண்ணீரில் வேகமாய் நீந்தும்.

மக்கள் வலையால் மீனைப் பிடிப்பார்கள்.

சிலர் மீனைச் சமைத்து உண்பர்.

பெரிய மீன், சிறிய மீனைத் தின்னும்.

பாடம் 32



நாய் நன்றியுள்ள மிருகம்.


இதை வீட்டில் வளர்க்கலாம்.

இது வீட்டைக் காவல் காக்கும்.

எங்கள் வீட்டில் ஒரு நாய் உண்டு.

அதன் பெயர் மணி.

பாடம் 33



இது ஒரு குதிரை வண்டி.


இந்த வண்டியைக் குதிரை இழுக்கும்.


அதனால், இதற்குக் குதிரை வண்டி என்பது பெயர்.

குதிரை வண்டி வேகமாய் ஓடும்.

இதில் மக்கள் ஏறிச் செல்லுவார்கள்.

பாடம் 34





பசுவும் கன்றும்


தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு ;—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி.

அம்மா என்குது
வெள்ளைப்பசு ;—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி.

நாவால் நக்குது
வெள்ளைப்பசு ;—பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக்குட்டி.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

பாடம் 35



பள்ளிக்கூடம்

இது எங்கள் பள்ளிக்கூடம். இதில் ஐந்து வகுப்புக்கள் இருக்கின்றன. இரு-நூறு மாணவர்கள் இங்குப் படிக்கின்றார்கள்.

நான் முதலாவது வகுப்பில் படிக்கிறேன். என் அண்ணன் ஐந்தாவது வகுப்பில் படிக்-கிறான். நாங்கள் காலையில் எட்டு மணிக்குப் பள்ளிக்குச் செல்வோம்; மாலை நான்கு மணிக்கு வீடு திரும்புவோம்.

எங்கள் ஆசிரியர் நல்லவர். அவர் நன்-றாகப் பாடம் சொல்லுவார்; கதைகள் சொல்லுவார்; விளையாட்டுக்கள் கற்பிப்பார். நாங்-கள் மகிழ்ச்சியுடன் பாடங்களைக் கற்கிறோம்.

பாடம் 36 (பாட்டு)



ஒன்று-யார்க்கும் தலை **ஒன்று.**

இரண்டு-எவர்க்கும்
கண் **இரண்டு.**

மூன்று-முக்காலிக்
கால் **மூன்று.**

நான்கு-நாற்காலிக்
கால் **நான்கு.**

ஐந்து-கையில் விரல் **ஐந்து.**

ஆறு-சக்கரக் கால் **ஆறு.**


ஏழு-வாரத்தின் நாள் **ஏழு.**

எட்டு-சிலந்திக் கால் **எட்டு.**

ஒன்பது-புள்ளிகள் **ஒன்பது.**

பத்து-இருகால் விரல் **பத்து.**

பாடம் 37



நிலாப்பாட்டு

வாவா நிலவே!
வருந்தி அழைக்கிறோம்!
ஒளிவீசு நிலவே!
உயிர்யாவும் மகிழ.


எழுஎழு நிலவே!
என்றும்உனைப் போற்றுவோம்
இனியவெண் ணிலவே!
இன்பம்யாவும் அடைய.

பார்பார் நிலவே!
பாலர்யாமும் பாடுவோம்
பால்பொழி நிலவே!
பாடிஆடி மகிழ.

சொல்லுசொல்லு நிலவே!
சோம்பல்யாமும் நீங்க
சோர்வுஇலா நிலவே!
சொன்னபடி நடக்க.

வீசுவீசு நிலவே!
குளிர்வெண் நிலவை.
விரும்புநல் நிலவே!
ஈசனடி பணிய.

பாடம் 38




விளையாடும் இடம்

நாங்கள் விளையாடும் இடம் இது. நாங்கள் பகல் முழுவதும் படிக்கிறோம்; மாலையில் விளையாடுகிறோம். விளையாட்டு மகிழ்ச்சி அளிக்கிறது.

நாங்கள் இரண்டு பிரிவாய் விளையாடு-கிறோம். பெரிய மாணவர்கள் ஒரு பிரிவு. சிறுவர்கள் ஒரு பிரிவு. சிறுவர்கள் நன்றாக விளையாடுகிறார்கள். விளையாட்டு உடலுக்கு உரம் தரும்.

பாடம் 39




சூரியன்

சூரியன் பகலில் ஒளி வீசுகிறது. சூரிய ஒளி வெப்பமானது. இரவில் நிலா ஒளி கொடுக்கிறது. நிலா ஒளி குளிர்ச்சியானது. ஒரு பகலும் ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஏழு நாள் சேர்ந்தது ஒரு வாரம்.

வாரத்தின் நாட்கள் ஏழு. அவை ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி எனப்படும்.

முப்பது நாள் சேர்ந்தது ஒரு மாதம். ஓர் ஆண்டுக்குப் பன்னிரண்டு மாதங்கள்.

பாடம் 40



பூனை

எங்கள் வீட்டில் ஒரு பூனை இருக்கிறது. அது மிக அழகானது! அதன் தலை உருண்டையானது. அதற்கு மீசை இருக்கிறது.

பூனையின் பாதம் மிருதுவானது. பூனை நடக்கும் போது ஓசை கேளாது. பூனை பாலைக் குடிக்கும். அது அடுப்பண்டையில் படுக்கும்.

பூனை எலிகளைப் பிடிக்கும். அதற்கு இரவில் கண் நன்ருகத் தெரியும். அது மியா-மியா எனக் கத்தும். அதற்கு நான்கு குட்டிகள் உண்டு.

பாடம் 41



காகமும் நரியும்

மரத்தில் ஒரு காகம் இருந்தது. அதன் வாயில் ஒரு வடை இருந்தது. அவ்வழியே ஒரு நரி வந்தது. அது வடையைத் தின்ன ஆசைப்பட்டது.

அது காகத்தைப் பார்த்து, 'காக்கை-யாரே, உமது குரல் இனிமையானது! ஒரு பாட்டுப் பாடும்!' என்றது. காகம் தன் குரல் இனிமையானதுதான் என்று நினைத்-தது; உடனே வாயைத் திறந்தது; 'கா கா' எனக் கத்திற்று. வாயிலிருந்த வடை கீழே விழுந்தது. நரி வடையை எடுத்துக்கொண்டு ஓடினது. காகம் ஏமாந்தது.

பாடம் 42

பொம்மைக் கலியாணம்

(பாட்டு)

பொம்மைக்கும் பொம்மைக்கும் கலியாணம்,
பூலோகம் எல்லாம் கொண்டாட்டம்!
பாவைக்கும் பாவைக்கும் கலியாணம்,
பகலும் இரவும் வேலையாம்.

கொட்டகை போடுது சிலந்தி;
குறடு கட்டுது கறையான்;
கோலம் போடுது நண்டு.

கண்ணுக்குமை, காக்கை கூட்டுது;
கழுத்துக்கு ஆரம், தத்தை கட்டுது;
கொண்டைக்குப்பூ, கோழி வளர்க்குது.

குயில்கள் இனிய குரலில் பாடும்;
மயில்கள் நல்ல நடனம் ஆடும்.

வண்டினம் எல்லாம் வந்து கூடி
வாய்க்கு இனிய அமுதம் வைக்கும்.

ஊரா ரே! நீர் வாரீரோ?
வந்து மணமும் காணீரோ?
கண்டு வாழ்த்திப் போகீரோ?


—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

பாடம் 43

வடமொழி எழுத்துக்கள்:



ஸர்ப்பம்



ஜாடி



புஷ்பம்



ஹாரம்

ஸ, ஸ.   ஜ, ஜ.   ஷ, ஷ

ஹ, ஹ

ஆத்தி சூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண், எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. கண்டு ஒன்று சொல்லேல்.
14. ஞயம்பட உரை.
15. இணக்கம் அறிந்து இணங்கு.
16. தந்தை தாய்ப் பேண்.
17. நன்றி மறவேல்.

18. பருவத்தே பயிர் செய்.
19. வஞ்சகம் பேசேல்.
20. இளமையில் கல்.
21. குணமது கைவிடேல்.
22. கேள்வி முயல்.
23. கொள்ளே விரும்பேல்.
24. சான்ருேர் இனத்து இரு.
25. சுளிக்கச் சொல்லேல்.
26. சூது விரும்பேல்.
27. செய்வன திருந்தச் செய்.
28. சோம்பித் திரியேல்.
29. துன்பத்திற்கு இடம் கொடேல்.
30. தெய்வம் இகழேல்.
31. தேசத்தோடு ஒத்து வாழ்.
32. நன்மை கடைப்பிடி.
33. நூல் பல கல்.
34. நோய்க்கு இடம் கொடேல்.
35. பிழைபடச் சொல்லேல்.
36. பூமி திருத்தி உண்.

37. பெரியாரைத் துணைக்கொள்.
38. பேதைமை அகற்று.
39. பொருள்தனைப் போற்றி வாழ்.
40. மனம் தடுமாறேல்.
41. மீது ஊண் விரும்பேல்.
42. மூர்க்கரோடு இணங்கேல்.
43. மேல் மக்கள் சொல் கேள்.
44. வல்லமை பேசேல்.
45. வித்தை விரும்பு.
46. உத்தமனாய் இரு.
47. ஊருடன் கூடி வாழ்.
48. வைகறைத் துயில் எழு.
49. வெட்டெனப் பேசேல்.
50. ஓரம் சொல்லேல்.

SELVAN SENTAMIL VACHAKAM

BOOK I

AUTHOR :
VIDWAN G. MICHAEL PILLAI, M.A.
EDITOR :
MAHAVIDWAN M. V. VENUGOPAULA PILLAI

JEGASELVAN & CO.,
PUBLISHERS
NAGERCOIL :: TIRUCHI

 [Price nP. 40